**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
wcflondon@gmail.com

# இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை –

# பாடம் 09

# உபத்திரவம் – 03- இஸ்ரவேல்:

# கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம்: ரோமர் 9-11

நன்கு அறியப்பட்ட யூத, பரிசேயனாகிய, பவுலிடமிருந்து, யூதரின் வரலாற்றை அறிந்துகொள்வதற்காக நாம் ரோமருக்கு எழுதிய நிருபத்திற்கு (கடிதம்) நேராக நம் கவனத்தை செலுத்துவோம்.

## ரோமர் நிருபத்தின் கண்ணோட்டம்:

| | | |
|---|---|---|
| அதிகாரம் 1 – 3:10 | பாவம் *sin* | *3:10* நீதிமான் ஒருவனாகிலும் இல்லை |
| அதிகாரம் 3:10- 5 | இரட்சிப்பு *salvation* | *5:20* பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று |

| | | |
|---|---|---|
| அதிகாரம் 6-8 | பரிசுத்தமாக்குதல் *sanctification* | *7:4* நியாயப்பிரமாணத்துக்கு மரித்து, மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி |
| அதிகாரம் 12-16 | சேவை *service* | *12:1* நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும் |

**அதிகாரம் *9-11* இறையாண்மை (ஏகசக்கராதிபதி) *(Sovereignty)***

| | | | |
|---|---|---|---|
| அதிகாரம் *9* | கடந்த காலம் | சிறப்புரிமை *Privilege* | தேர்ந்தெடுக்கப்பட்ட |
| அதிகாரம் *10* | நிகழ்காலம் | பிரச்சனை *Problem* | நிராகரிப்பு |
| அதிகாரம் *11* | வருங்காலம் | வாய்ப்பு *Prospect* | உயிர்த்தெழுதல் |

**ரோமர்** *9:6,* தேவவசனம் அவமாய்ப் போயிற்றென்று சொல்லக்கூடாது; ஏனென்றால், இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலரல்லவே.

**ரோமர் *11:1***, இப்படியிருக்க, தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரோ என்று கேட்கிறேன், தள்ளிவிடவில்லையே; நானும் ஆபிரகாமின் சந்ததியிலும் பென்யமீன் கோத்திரத்திலும் பிறந்த இஸ்ரவேலன்.

## மாற்றுக் கோட்பாடு *(Replacement Theology)*:

தேவனுடைய திட்டத்தில் சபை இஸ்ரவேலுக்கு பதிலாக உள்ளது என்பதையே மாற்றுக் கோட்பாடு *(Replacement theology)* (இது சூப்பர்செஷநிசம் *(supersessionism)* என்றும் அழைக்கப்படும்) முக்கியமாக கற்பிக்கிறது.

இனியும் யூதரகள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அல்ல என்பதையே இந்த மாற்றுக் கோட்பாடு *(Replacement theology)* கற்பிக்கிறது. மேலும் தேவனிடம் இஸ்ரவேல் தேசத்தைக் குறித்து எந்த ஒரு குறிப்பிட்ட எதிர்கால திட்டங்களும் இல்லை என்பதையும் இது கற்பிக்கிறது.

இதை நாம் நம் கடைசி பாடத்தில் கண்டோம். பிரச்சனை என்ன என்று உங்களுக்கு தெரியுமா? எவ்வளவு சபை பிரிவுகளும் *(denominations)* அல்லது முக்கிய நபர்களும் இந்த இறையியலை ஏற்றுக்கொண்டார்கள் என்று தெரியுமா?

நான் உங்களுக்கு ஒரு சிறிய பட்டியலைத் தருகிறேன்.

- நாக்ஸ் இறையியல் படிமுறை *(Knox Theological seminary)*,
- லிகொனியர் *(Ligonier)* ஊழியங்கள்,
- ஹான்க் ஹனேகிராப் *(Hank Hanegraaff)*,

- *கதோலிக்க சபை (Catholic Church),*
- *பெரும்பாலான ப்றேச்பிடேரியன் (Presbyterians), மேதடிஸ்ட் (Methodists), லூதரின் (Lutherans) மற்றும் எபிஸ்கொபாலியான்ஸ் (Episcopalians) மற்றும்*
- *சில பாப்டிஸ்ட் (Baptists), பிரதரின் (Brethren) மற்றும் பிரிவுகள் அற்ற சபைகள் (Non- Denominations)*
- *இஸ்ரவேல் "கைவிடப்பட்டது" என்று அகஸ்டின் (Saint Augustine) கூறினார்.*
- *யூத தொன்னூல்களை எரிக்கக்கோரி ஜான் கிரைசொச்டோம் (John Chrysostom), என்கிற அந்தியோகியாவின் பிஷப் (bishop of Antioch) கூறினார்.*
- *இருண்ட காலம் முழுவதிலும் பல ஆலோசனை சபைகள் (synods) யூத மக்களுக்கு பாடுகள் கொடுக்கும்படி ஆணை பிறப்பித்தது.*

*மார்ட்டின் லூதரிடம் (Martin Luther) இருந்தே பெரும்பாலான பெரிய தாக்குதல்களும் வந்தன. இவரே "யூதர்களும் அவர்களின் பொய்களும்" (*"Jews and their lies"*) என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். இதனால் பல தாக்குதல்கள் அந்த மக்களின் மீது வந்தன.*

- *ஜெப ஆலயத்துக்கு (synagogues) தீ வைக்குதல்*
- *யூதர்களின் வீட்டை உடைத்தல்*
- *யூத ஜெபங்களை தடை செய்தல்*

- யூத குருமார்கள் (Rabbis) கற்பிக்க தடை விதித்தல்
- எந்த யூத மக்களையும் பயணிக்க அனுமதியாதல்
- நாஜிக்கள் (Nazis) இவருடைய நுல்களை பயன்படுத்தி தங்களுடைய தத்துவத்தை பரப்பினர்

ஆனால், அபோஸ்தலனாகிய பவுல் ரோம சபைக்கு எழுதும் போது, இந்த விஷயத்தை எடுத்துக்கொண்டு, தேவ இராஜ்ஜியத்தில் இஸ்ரவேலின் பங்கை குறித்து எழுதியுள்ளார்.

சுவிசேஷம் அவர்களுக்கு பிரசங்கிக்கப்படும் என்று **அவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது**.

**ரோமர் 1:4,** தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப் பற்றி வாக்குத்தத்தம்பண்ணினபடி (In English Its romans 1:2)

சுவிசேஷத்தில் மற்றவர்களைக் காட்டிலும் அவர்களுக்கு **முன்னுரிமை** உள்ளது.

**ரோமர் 1:16,** கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது.

அவர்கள் யூதர்கள் என்பதால் அவர்களுக்கு **மேன்மை** உள்ளது.

**ரோமர் 3:1,** இப்படியானால், யூதனுடைய மேன்மை என்ன? விருத்தசேதனத்தினாலே பிரயோஜனம் என்ன?

*அவர்கள் இயேசுவை மேசியா இல்லை என்று நிராகரித்து சிலுவையில் அறைந்தனர். இயேசு உயிர்த்தெழுந்த பின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது.*

*பெந்தகோஸ்தே (Pentecost) நாளிற்கு பின் ஒரு எழுப்புதல் உண்டானது. அதற்கு பின் ஆயிரமாயிரமாய் மக்கள் இரட்சிப்புக்குள் வந்தனர். இதற்கு பின்னரே பிரச்சனை துவங்கியது.*

***அப்போஸ்தலர்** 2:41, அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.*

***அப்போஸ்தலர் 4:4**, வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள்; அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது.*

***அப்போஸ்தலர்** 6:7, தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகர் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்.*

*இதற்குபின் உபத்திரவத்திற்கான கீழ்பாதை ஆரம்பமானது. மக்கள் தாங்கள் தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசம் கொண்டதற்காக அவர்கள் கொல்லப்பட்டனர்.*

*அப்போஸ்தலர் 7இல் குறிப்பிட்டபடி முதல் வீரமரணம் ஸ்தேவானிடம் (Stephen) இருந்து துவங்கியது. ஸ்தேவானின் (Stephen) கொலைக்கான கருவியும் இந்த நிருபத்தின் ஆசிரியருமாகிய பவுலைத் தவிர வேறு யாரால் இதற்கான விடையை சிறப்பாக கொடுக்க முடியும் ?*

# இஸ்ரவேலின் கடந்த காலம்

## அதிகாரம் 9

| அதிகாரம் 9 | கடந்த காலம் | சிறப்புரிமை | தேர்ந்தெடுக்கப்பட்ட |
|---|---|---|---|

1. சிறப்புரிமை (Privilege) பிள்ளைகள் (9:1-5)
2. வாக்குதத்தத்தின் பிள்ளைகள் (9:6-13)
3. தயவின் பிள்ளைகள் (9:14-18)
4. இறையாண்மை ஏக சக்கராதிபதியாகிய **(Sovereignty)** தேவன் (9:19-33)
   - கடவுளுடன் வாதாடுவதற்கு நாம் யார்?
   - தீர்கதரிசிகள் என்ன கூறினார்கள்?
   - தேவன் ஏன் புரஜாதிகளிடம் திரும்பினார் ?

### 1. அருளப்பட்ட பிள்ளைகள் (9:1-5)

**ரோமர்** *9:2-3,* எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது; 3 மாம்சத்தின்படி என் இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவைவிட்டுச் சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே.

*என்னவொரு வாக்கியம்!*

*இடைவிடாத மனவேதனையும் துக்கமும்!*

*அவர் தன் இனத்தாருக்காக சபிக்கப்பட்டு நரகத்திற்கு செல்வதற்கும் ஆயத்தமாக இருந்தார்.*

*இது போன்ற பாரத்தை நாம் மோசேயின் வாழ்க்கையிலும் காணலாம்.*

***யாத்திராகமம் 32:31-32**, [31]அப்படியே மோசே கர்த்தரிடத்திற்குத் திரும்பிப்போய்: ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி, மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள். [32]ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் என்றான்."*

*தேவனிடம் அவருடைய மக்களுக்காக இடைபடுவதில் எப்படிப்பட்ட ஒரு வழி. தேவன் அவர்களில் இருந்து ஒரு பெரிய தேசத்தை எழுப்புவேன் என்று அவரிடம் கூறியபோதும் அவர் இடைபட்டார்.*

*இது போன்றதொரு பாரத்தை நாம் தேவனாகிய இயேசு கிறிஸ்துவிடத்திலும் காணலாம்.*

***மத்தேயு** 23:37, எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக்*

*கூட்டிச்சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று!*

## இஸ்ரவேலின் சிறப்பம்சங்கள்

- இஸ்ரவேலர்கள் = தேவனுடைய மக்கள் என்று பெயர்பெற்றவர்கள்
- தேவனுடைய புத்திரராக சுவிகரிக்கப்பட்டவர்கள்
- தேவனின் மகிமை = ஷகினா (Shekinah); (மகிமை = தேவனை உணரக்கூடிய வெளிப்பாடு, வனாந்திரத்தில் இஸ்ரவேலர்களை பின்பற்றிய மேகஸ்தம்பம், பின் அது தேவாலயத்தை நிரப்பிவிட்டது)
- உடன்படிக்கை = ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே, தாவீது
- நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய் வழங்கப்பட்டது
- தேவாலய சேவைகள் = ஆராதனை
- வாக்குத்தத்தங்கள் = இது இன்னமும் பழைய ஏற்பாட்டின் தாள்களில் ஒரு தேசத்திற்கான வாக்குறுதிகளால் நிறைந்து உள்ளது. அந்த ஒரு நாள் தேவ இராஜ்ஜியம் எருசலேமை மைய்யமாக வைத்து தேவன் தாமே ஆட்சி செலுத்தி எல்லா தேசங்களும் அங்கு சென்று ஆராதனை செய்வார்கள்.
- கோத்திரத்தலைவர்கள் (patriarchs) – யூத வரலாற்றிலுள்ள பெரிய ஆட்கள் = ஆபிரகாம், ஈசாக்கு,

*யாக்கோபு, மோசே, தாவீது போன்றவர்கள் விசுவாசத்தின் "தந்தைகள்" என்று அழைக்கப்பட்டவர்கள்*

- *மனிதகுல வரலாற்றில் மேசியா இஸ்ரவேலர்களில் இருந்து வந்தார்.*

*இவ்வளவு ஆசிர்வாதங்களை பெற்று அருளப்பெற்ற பிளைகளாக இருந்த போதிலும் இஸ்ரவேலர்கள் தேவனை பின்பற்றுவதில் தவறிவிட்டார்கள்.*

## *2. வாக்குதத்தத்தின் பிள்ளைகள் (9:6-13)*

*ஆபிரகாமுக்கு 2 பிள்ளைகள் இருந்தனர். முதலில் இஸ்மவேல் பிறந்தார், ஆனால் அவர் அடிமைப்பெண்ணின் புத்திரன். ஈசாக்கு இரண்டாவதாக பிறந்தார். அவரே வக்குதத்தத்தின் பிள்ளை. இவருடைய தாய் ஆபிரகாமின் மனைவியாகிய சாராள்.*

*ஈசாக்குக்கு இரண்டு புத்திரர்கள் இருந்தார்கள். ஆனால் தேவன் யாக்கோபை தேர்ந்தெடுத்தார். அவருடைய தகுதியின் நிமித்தம் அல்ல, ஆனால் தேவனே தேர்ந்தெடுத்தார். இரட்டையர்களில் ஒருவராலே தான் மேசியா வரவிருக்கும் அந்த குடும்ப பரம்பரையை (family line) சுதந்தரித்துக்கொள்ள முடியும். தேவன் அந்த வாக்குதத்தங்களை பெற்றுகொள்வதற்காக யாக்கோபை ஏசாவுக்கு மேலாக தேர்ந்தெடுத்தார்.*

## *3. தயவின் பிள்ளைகள் (9:14-18)*

*நிச்சயமாக உங்களில் சிலர் "தேவன் அவருடைய தேர்வில் நியாயமற்றவராய் இருக்கிறார் அல்லவா? என்று கேட்கிறீர்கள்.*

*இது நியாயம் அல்லது நீதியை பற்றிய கேள்வி அல்ல. (கடவுள் தன் சாயலில் நியாயமற்றவராக இருக்க முடியாது) ஆனால் தேவன் சுதந்திரமாய் யாரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது முற்றிலும் அவருடைய விருப்பம். ஏனெனில் அவர் ஏக சக்கராதிபதியாய் இருக்கிறார். தேவன் யார் என்பதை வைத்தே தேவன் செய்வது தீர்மானிக்கப்படுகிறது!*

## *4. ஏக சக்கராதிபதியாகிய தேவன் (9:19-33)*

### *தேவனுடன் வாதாடுவதற்கு நாம் யார்?*

*தேவன் நம்மை தேர்ந்தெடுத்திருக்கிறார், நாம் இதில் எதையும் தெரிந்தெடுக்கவில்லை என்பதை அறிந்துகொள்ளவேண்டும்*

- *நம் பெற்றோர்கள்,*
- *மரபணு கட்டமைப்பு (Genetic structure),*
- *நம்முடைய பிறப்பின் நேரம்/இடம்,*
- *நம்மை பற்றிய சில முன் தீர்மானிக்கப்பட்ட உண்மைகளுடன் பிறத்தல்*
- *நம்முடைய இருப்பும் நிச்சயம் ஆனால் நமக்கு நாள் தெரியாது*

*அவர் ஒரு குயவனை போல நம் வாழ்வை களிமண்ணான நம் இருதயத்தைக் கொண்டு வனைகிறார். களிமண் எப்படி தன்னை வடிவமைத்த விதத்தைக் குறித்து குறை சொல்ல முடியாதோ அதே போல தேவனுக்கும் நம் வாழ்வின் மீது அதிகாரம் உள்ளது என்று பவுல் கூறுகிறார்.*

## ***தீர்கதரிசிகள் என்ன கூறியுள்ளனர் ?***

*யூதர்களை விட்டு திரும்பி புறஜாதியாரை அழைப்பேன் என்று தேவன் முன்னரே அறிவித்திருந்தார். (ஓசியா தீர்க்கதரிசியின் மூலம்)*

*தேவன் அவருக்கு இஸ்ரவேலில் மீதியாயிருப்பவர்கள்(Remanent) மாத்திரம் தெரியும் என்று முன்னரே அறிவித்திருந்தார். (இந்த வார்த்தையை நீங்கள் அடிக்கடி கேட்பீர்கள். அதனால் அதனுடைய அர்த்தம்: கடவுளுக்கு உண்மையாய் நிலைத்திருக்கும் ஒரு சிறிய சிறுபான்மையினர் மேலும் அதனால் இரட்சிக்கப்படுவார்கள்). அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். யூதரில் விசுவாசிக்கும் மீதியாயிருப்பவர்களும் விசுவாசிக்கும் புறஜாதியாருமே “என் ஜனங்கள்” என்று அழைக்கப்படுவார்கள்.*

## ***தேவன் ஏன் புறஜாதிகளிடம் திரும்பினார் ?***

*புறஜாதியார் இயேசுவை விசுவாசித்து அவரையே மேசியாவாக ஏற்றுக்கொண்டனர். யூதர்கள் அவரை விசுவாசிப்பதில் இடறினார்கள், அதனால் அவரை நிராகரித்தார்கள்.*

# இஸ்ரவேலின் நிகழ்காலம்

## *ரோமர் 10*

| ***அதிகாரம் 10*** | ***நிகழ்காலம்*** | ***பிரச்சனை*** | ***நிராகரிப்பு*** |
|---|---|---|---|

### ***நிகழ்காலம்: இஸ்ரவேலர்கள் விருப்பத்துடனே நிராகரித்தனர்***

1. *அவர்கள் நிராகரித்தற்கான காரணம் 10:1-13*
2. *தீர்வு 10:14-17*
3. *விளைவு 10:18-21*

### *1.* ***அவர்கள் நிராகரித்தற்கான காரணம்*** *10:1-13*

*அவர்கள் உண்மையுள்ளவர்கள், ஆனால் இயேசுவைப் பற்றி உண்மையாகவே தவறாக புரிந்து கொண்டுள்ளனர். அவர்களுக்கு கடவுளின் மீது பக்திவைராக்கியம் இருந்தது ஆனால் ஞானம் இல்லை. "தேவனிடம் இருந்து வரும் நீதியை" அவர்கள் அறிந்திருக்கவில்லை.*

*அவர்கள் பெருமையும் சுய நீதிமான்களாகவும் இருந்தனர். அவர்களே தங்களுடைய நீதியை நிறுவி, தங்களுடைய நற்கிரியைய்களைக் கண்டு பெருமை அடைவார்கள். அவர்கள் தங்களை பாவத்தில் இருந்து மீட்க ஒரு இரட்சகர் தேவை என்பதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.*

*அவர்கள் தங்கள் நியாயப்பிரமாணத்தை தவறாக புரிந்து கொண்டதே இந்த நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டதற்கான*

*காரணம். வரவிருக்கும் மேசியாவையே எல்லா யூத நம்பிக்கையும் சுட்டிக்காட்டியது.*

- *உயிர்ப்பலி,*
- *ஆசாரியன்,*
- *தேவாலைய சேவைகள்,*
- *மத பண்டிகைகள் மற்றும்*
- *உடன்படிக்கை.*

*நியாயப்பிரமாணம் அவர்களை பாவி என்றும் ஒரு இரட்சகர் தேவை என்பதையும் காண்பித்தது. நியாயப்பிரமாணம் தங்களை மேசியாவிடம் செல்ல வழிவகுக்க விடாமல் அதற்கு பதிலாக அவர்கள் அந்த நியாயப்பிரமாணத்தையே பிடித்துக் கொண்டு அது அவர்களை நீதிமானாக்க வேண்டும் என்று எண்ணினார்கள். இது நாம் கண்ணாடியில் நம்மை பார்த்து கண்ணாடி காட்டும் நம்மை திருத்துவதை விட்டுவிட்டு கண்ணாடியை திருத்துவது போல உள்ளது.*

## *2. தீர்வு 10:14-17*

*யாரும் இரட்சிக்கப்பட ஒரே வழி விசுவாசம். அவர்கள் அழைப்பதற்கு முன்னரே அவர்கள் நம்ப வேண்டும். அவர்கள் நம்புவதற்கு, அவர்கள் கேட்டிருக்க வேண்டும். ஏனென்றால் வார்த்தையை கேட்பதன் மூலமே நம்பிக்கை உருவாகும். கேட்பதும் விசுவாசிப்பதுமே நிராகரிப்பதன் தீர்வு.*

## *3. விளைவு 10:18-21*

*"ஒருவேளை யூதர்கள் சுவிசேஷத்தை கேட்காமல் இருந்திருக்கலாம்? என்ற இந்த கேள்வியை இது நம்மை கேட்க வைக்கிறது. ஆனால் இதன் பதில், இல்லை அவர்கள் கேட்டுள்ளனர்!*

*பிறகு ஒருவளை அவர்களுக்கு புரியாமல் இருந்திருக்கும் என்று நீங்கள் கேட்கலாம்? இல்லை, அவர்களுக்கு புரியும். ஆனால் மோசேயின் காலத்திலிருந்தே இதுவே அவர்களுடைய நடத்தையாக இருந்து வருகிறது. தேவனின் இந்த எளிய வெளிப்பாட்டை யூதர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். இஸ்ரவேலைப் பற்றி பவுல், மோசேயையும் ஏசாயாவையும் மேற்கோளாய் காட்டுகிறார்.*

# இஸ்ரவேலின் எதிர்காலம்

## *ரோமர் 11*

| அதிகாரம் 11 | வருங்காலம் | வாய்ப்பு | உயிர்த்தெழுதல் |
|---|---|---|---|

1. *ஒரு பகுதி நிராகரித்தால் 11:1-10 (Partial Rejection)*
2. *ஒரு குறிக்கோளுடனான நிராகரிப்பு 11:11-17 (Purposeful Rejection)*
3. *மீட்பு உறுதி 11:18-36*

### *1. ஒரு பகுதி நிராகரித்தால் 11:1-10 (Partial Rejection)*

*தேவன் அவருடைய மக்களை முழுவதுமாக நிராகரித்தாரா?*

*இல்லை!!*

*பவுல் இரண்டு உதாரணங்களை கொடுக்கிறார்: ஒன்று தன்னை மற்றும் எலியாவை*

*தேவன் யூதர்களை முழுவதுமாக நிராகரித்தார் என்றால் என்னை பாருங்கள் என்று பவுல் கூறுகிறார். நானே சபையை துன்புறுத்தினேன் ஆனால் இப்போது இயேசுவை பின்பற்றுகிறேன்.*

*நான் ஒருவன்மாத்திரமே மீதியாயிருக்கிறேன் என்று எலியா கூறியபோது ஏழாயிரம்பேரை எனக்காக மீதியாக வைத்தேன் என்று அதற்கு பிரதியுத்தரமாக தேவன் கூறுகிறார். யூதர்கள் மத்தியில் அவருக்கென்று மீதியாயிருக்கிற கூட்டம்*

*எப்போதும் உண்டு என்று தேவன் முடிக்கிறார். அது இப்போதும் உண்டு*

*2018 ஆண்டில் இன்றும் எருசலேமில் 150க்கும் மேற்பட்ட மேசியானிக் (Messianic) சபைகள் உள்ளது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

## *2.* ஒரு குறிக்கோளுடனான நிராகரிப்பு *11:11-17*

*தேவன் மூன்று நோக்கங்களை "யூதர்களின் மீறுதல்களின் மூலம்" நிறைவேற்ற திட்டமிட்டார்.*

*a) இரட்சிப்பு புறஜாதியாருக்கு வரும். நாம் அப்போஸ்தலர்களின் புத்தகத்தில் பவுலின் ஊழிய பயணத்தை பற்றி படிக்கும் போது ஒரு மாதிரியை (pattern) புரிந்து கொள்ளலாம்.*

- *பவுல் முதலில் யூதருக்காக ஜெப ஆலயத்திர்குள்ளே (synagogues) செல்வார்.*
- *கிறிஸ்துவை பிரசங்கிப்பார், சிலர் விசுவாசிப்பார்கள்.*
- *அவரை வெளியே உதைத்துத் தள்ளுவார்கள்.*
- *அவர்களுடைய நிராகரிப்புக்குப் பின்னர் விசுவாசிக்கும் புறஜாதியாரிடத்தில் சபைகளை நிறுவ அவர் திரும்புவார்.*

*b) புறஜாதியாரின் விசுவாசம் யூதரை பொறாமைக்கு உள்ளாக்கும்!*

c) *ஒருநாள் இஸ்ரவேலின் முழுமை உலகம் முழுவதற்கும் அதிக ஐசுவரியத்தை அளிக்கும்.*

*பவுல் இப்போது தன்னுடைய கவனத்தை யூதரல்லாத, புறஜாதியாரின் பக்கம் திருப்பினார், அது வேறுயாருமல்ல நீங்களும் நானும் தான்.*

*அவர் இரண்டு உதாரணங்களை தருகிறார்:*

1. ***அடுதல் (Baking) (ரோமர் 11:16)** - யூத விவசாயிகள் ஒரு தானிய பயிரை வளர்த்து அதனுடைய முதல் துளிரை (shoot) அவர் ஆசாரியரிடத்தில் பலியாக செலுத்துவார்.*

   *இதேபோல், தானியத்தை அடுதலுக்காக (Baking) பயன்படுத்தும் போது முதற்பலனாகிய மாவின் முதல் பங்கை பலியாக செலுத்துவர். ஒரு பங்கு பரிசுத்தமாயிருந்தால், பிசைந்தமா முழுவதும் பரிசுத்தமாயிருக்கும். "ஒரு பிரதி பங்கை தேவனிடம் பரிசுத்தம்பண்ணக் கொடுத்தால் அது முழுவதும் அவருடையதாகிவிடும்.*

   *அதனால் முதலில் மாற்றப்பட்டவர்கள் விசுவாசித்தால், மீதமுள்ளவர்களின் மாற்றமும் அதற்கு பின் தொடரும் என நம்பலாம்."*

2. ***தோட்டக்கலை (ரோமர் 11:16-17) – ஒலிவ மர உருவக் கதை.***

***மரம்***: *இஸ்ரவேலர்களே தேவனுடைய ஜனங்கள். கோத்திரத்தலைவர்களே (patriarchs) அதன் வேர்.*

***முறித்துப்போடப்பட்ட கிளைகள்***: *விசுவாசமில்லாத யூதர்களின் தற்காலிக நீக்கம்.*

***ஒட்டவைக்கப்பட்ட கிளைகள்:*** *விசுவாசமுள்ள புறஜாதியினர்.*

*புறஜாதியாரே யூதர்களுக்கு எதிராக பெருமையாகவோ, திமிர்பிடித்தோ அல்லது பாரபட்சமோ காட்டாதீர்கள். என்றேன்றைக்கும் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாக இருங்கள்.*

## ***முடிவுரை:***

*புறஜாதியார் முழுமை பெருவதற்காகவே ஒரு தேசமாக, தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களான அவர்களின் கண்கள் தற்காலிகமாக அடைக்கப்பட்டு உள்ளது. ஆனால் தேவன் இஸ்ரவேலரையோ அல்லது யூதர்களையோ அவருடைய நித்திய திட்டத்தில் இருந்து தள்ளிவைத்து விட்டார் என்று நினையாதிருங்கள்.*

*தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பாக்கியம் இஸ்ரவேலருக்கு வழங்கப்பட்டது.*

- *தேவன் இஸ்ரவேலருடன் உடன்படிக்கை செய்தார்.*
- *அவர்கள் மிகவும் சலுகை பெற்றவர்கள்.*
- *இஸ்ரேலுக்கு ஒரு தத்தெடுப்பு வழங்கப்பட்டது.*
- *தேவனை சேவிப்பதற்காக ஆசீர்வதித்தார்.*
- *எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தருடைய மகிமையில் அவர்கள் இருப்பதற்கான அற்புதமான வாய்ப்பை தேவன் கொடுத்திருந்தார்.*

*ஆனால் அவர்கள் தோல்வி அடைந்ததால் ஆண்டவரின் மகிமை அவர்களை விட்டு விலகியது.*

*தேவன் நியாயப்பிரமாணத்தை அவர்களிடமிருந்து எடுத்துவிட்டார், அதை சபைக்கு கொடுத்திருக்கின்றார், நிரந்தரமாக அல்ல, தற்காலிகமாக.*

*சிலுவைக்கு போவதற்கு முன்பு, கடைசி வாரத்தில் இயேசு இரண்டு உவமைகளில் இதைப் பற்றி பேசினார்.*

***மத்தேயு 21: 33-44, துன்மார்க்க திராட்சரச வேலைக்காரன் உவமை***

***மத்தேயு 21:43,*** *"ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்.*

***மத்தேயு 22: 1-14, திருமண விருந்து உவமை***

***மத்தேயு*** *22: 7, ராஜா அதைக் கேள்விப்பட்டு, கோபமடைந்து, தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலைபாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரித்தான்.*

*இஸ்ரவேல் மீது தீர்ப்பு வரும்.*

***மத்தேயு*** *22: 9, ஆகையால், நீங்கள் வழிச்சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக்கொண்டு வாருங்கள் என்றான்.*

*அழைக்கப்பட்டிருக்காத மற்றவர்கள் சந்தோஷத்தை பகிர்ந்துகொள்ள அழைக்கப்படுவார்கள்.*

*நாம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை குறித்து படித்து வருகிறோம். அதனால், இஸ்ரவேலர்கள் ஒரு தேசமாக உபத்திரவங்களுக்குள் கடந்து செல்வார்கள். மேலும் அதன் மூலமாய் இரட்சிக்கப்படுவார்கள்.*

***சகரியா*** *12:10, "நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்.*

***ஓசியா 5:15-6:3***, [15]*அவர்கள் தங்கள் குற்றங்களை உணர்ந்து, என் முகத்தைத் தேடுமட்டும் நான் என் ஸ்தானத்துக்குத் திரும்பிப்போய்விடுவேன்; தங்கள் ஆபத்தில் என்னைக் கருத்தாய்த் தேடுவார்கள். [1]கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்; நம்மைப் பீறினார், அவரே நம்மை குணமாக்குவார்; நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார். [2]இரண்டுநாளுக்குப்பின்பு அவர் நம்மை உயிர்ப்பிப்பார்; மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார்; அப்பொழுது நாம் அவருடைய சமுகத்தில் பிழைத்திருப்போம். [3]அப்பொழுது நாம் அறிவடைந்து, கர்த்தரை அறியும்படி தொடர்ந்து போவோம்; அவருடைய புறப்படுதல் அருணோதயம்போல ஆயத்தமாயிருக்கிறது; அவர் மழையைப்போலவும், பூமியின்மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப்போலவும் நம்மிடத்தில் வருவார்.*

ஆகையால் இந்த பாடத்தில் தேவன் இஸ்ரவேலை முழுமையாக நிராகரிக்கவில்லை அவர்கள் இன்னும் தேவனுடைய பரிபூரண திட்டத்தில் தான் இருக்கின்றார்கள் என்பது தெளிவாக விளங்குகின்றது.